# ஆஸ்திரேலியாவில் வீட்டு மற்றும் குடும்ப வன்முறை ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல



## உங்களின் துணைவர் அல்லது குடும்ப உறுப்பினர்:

- [ ] உங்களுக்கோ அல்லது உங்கள் குழந்தைகளுக்கோ பயத்தை ஏற்படுத்துகிறாரா?
- [ ] உங்களையோ அல்லது உங்கள் குழந்தைகளையோ தாக்குகிறாரா அல்லது காயப்படுத்துகிறாரா?
- [ ] நீங்கள் விரும்பாவிட்டாலும் உடலுறவில் ஈடுபட வேண்டுமென்று எதிர்பார்க்கிறாரா?
- [ ] கத்துவது , பொருட்களை எறிவது  அல்லது உடைப்பது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுகிறாரா ?
- [ ] உங்களை அவமதிக்கிறாரா அல்லது நீங்கள் ஒரு பொருட்டல்ல என்று நினைக்க வைக்கிறாரா?
- [ ] நீங்கள் சொந்தமாக பணம் வைத்திருப்பதை தடுக்கிறாரா?
- [ ] வெளியிடங்களுக்கு செல்லுவதையோ அல்லது மக்களோடு பழகுவதையோ தடுக்கிறாரா?

**இவற்றில் ஏதேனும் ஒன்றிற்கு நீங்கள் 'ஆம்' என்று பதிலளித்திருந்தால், நீங்கள் வீட்டு  மற்றும் குடும்ப வன்முறையில் வாழ்வதாக இருக்கலாம்.**

**உங்களுக்கு உரிமைகள் உள்ளன.** வீட்டு மற்றும் குடும்ப வன்முறை சட்டவிரோதமானது. புதிதாக புலம்பெயர்ந்தோர் மற்றும் தற்காலிக வீசா வைத்திருப்பவர்கள் உட்பட அனைவரையும் சட்டம் பாதுகாக்கிறது.

**ஆதரவு கிடைக்கிறது.** ஒரு மருத்துவர் அல்லது சுகாதார பணியாளருடன் பேசுங்கள். உங்கள் உறவில் தொடர்ந்து இருப்பது அல்லது விட்டுவிடுவது  என்று எந்த முடிவை நீங்கள் தெரிவு செய்தாலும்  நாங்கள் உங்களுக்கு ஆதரவளிப்போம்.

**உங்கள் மொழியில் ஆதரவுதவி பெற இலவச தொழில்முறை உரைப்பெயர்ப்பாளரைக் கேட்கவும்.**

**உள்ளூர் தொடர்பு (Local contact)**

சேவை (Service):

தொலைபேசி (Phone):

SHPN (MHCS) 230852-17

பிற ஆதரவுதவிக்கு , 24 மணிநேர உதவி சேவைகள் எண்கள் உள்ளன:

| | |
|---|---|
| 1800RESPECT | 1800 737 732 |
| NSW Domestic Violence Helpline (NSW வீட்டு வன்முறை உதவி சேவை எண்) | 1800 65 64 63 |
| Lifeline Australia (லைஃப்லைன் ஆஸ்திரேலியா) | 13 11 14 |

உங்கள் மொழியில் ஆதரவுதவி  பெற, 131 450 என்ற எண்ணில் மொழிப்பெயர்ப்பு மற்றும் உரைப்பெயர்ப்பு சேவையை (TIS) அழைத்து, உதவி சேவையை கேட்கவும்.

**அவசர அல்லது உயிருக்கு ஆபத்தான சூழ்நிலையில், 000-ஐ அழைக்கவும்.**

NSW GOVERNMENT